# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.4/2022

DW1–சீதாலட்சுமி நாள்.07.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என் தகப்பனாருக்காவும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என்அப்பா என்ன தொழில் செய்கிறார் மற்றும் அவருக்கு என்ன வருமானம் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர் விவசாயம் செய்தார். பால்மாடு வைத்திருந்தார். விவசாயம் செய்த நிலங்கள் பூர்வீக நிலங்கள் என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்தில் வீடு கட்டும் போது தான் பூர்விக சொத்துக்கள் விற்கப்பட்டது என்றால் சரிதான். 1985ம் ஆண்டு என்அப்பா சொத்து வாங்குவதற்கும், 1987ம் ஆண்டில் பரிவர்த்தனை செய்வதற்கும் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு என்அப்பா செய்தார் என்றால் சரிதான். 2005ம் ஆண்டில் மனோகரனுக்கு கிரையம் கொடுத்த சொத்தை பூர்விகமாக அனுபவம் செய்து வந்ததால் தான் அனைவரும் சேர்ந்து கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். சுமார் 17 வருடங்களுக்கு முன்பு பெரம்பலூர் முருகன் கோவிலில் வைத்து என் அண்ணனுக்கு திருமணம் ஆனது. நான் கூறுவது போன்று கோவிலில் நடந்த திருமணத்திற்கு ரூ.5இலட்சம் செலவாகது என்றால் சரியல்ல. என் அண்ணன் பெயரில் என் அப்பா ரூ.2 இலட்சம் டெபாசிட் செய்தார் என்பதை காட்ட என்னிடம் ஆதாரம் இல்லை. அது அவர்களிடம் உள்ளது. கை செலவுக்காக என் அப்பா ரூ.5 இலட்சம் என் அண்ணனிடம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனோகரனக்கு சொத்தை விற்ற பணத்தை வைத்து 2006ம் ஆண்டு ரவி என்பவரிடம், கலியபெருமாள் வகையராவிடம் என் தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த கிரய விவரத்தை மறைப்பதற்காக என்அண்ணனின் கை செலவிற்கும் மற்றும் அவர் பெயரில் டெபாசிட்டாக என் அப்பா கொடுத்தாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. என் அண்ணனுக்கு நான் கூறுவது போன்று என் அப்பா பணம் கொடுக்கவில்லை என்றும், நான் கூறுவது போன்று என் அண்ணன் அதை கெட்டவழியில் அழிக்கவில்லை என்றும், வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்அக்காவுக்கும் எனக்கும் திருமணம் ஆன பின்பு என் அண்ணனுக்கும் அதன் பின்னர் என் தங்கைக்கும் திருமணம் ஆனது. என் கடைசி சகோதரிக்கு திருமணமாவதற்கு முன்பு என் அம்மா, அப்பா மற்றும் என் அண்ணன், அண்ணி ஒரே குடும்பாக சேர்ந்து இருந்திருந்தார்கள் என்றால் சரிதான். என் அண்ணன் 2018ம் ஆண்டு இறக்கும் வரை ஒரே குடும்பமாக தான் இருந்தார். அப்போது வரவு செலவை என் அப்பா பார்த்து வந்தார் என்றால் என் அப்பாவும், அண்ணனும் பார்த்து வந்தார்கள். இதுவரை எங்கள் சமூக வழக்கப்படி எனக்கும், என் சகோதரிகளுக்கும் செய்யவேண்டிய சீர்வரிசைகளை என் தகப்பனார் செய்து வருகிறார் என்றால் சரிதான். என் அண்ணன் விற்ற சொத்துகள் சம்மந்தமாக என் தகப்பனார் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. கேட்டார் என் அண்ணன் தகாத வார்த்தைகளை பேசினார். எங்களுடைய ஆட்சேபணை மீறி என் அண்ணன் விற்றுவிட்டதாக எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்அண்ணன் நீதிமன்ற அனுமதி பெற்று குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் படிப்பு செலவுக்காக விற்றார் என்றால் சரியல்ல. பேரன் பெயரில் எழுதிவைத்த சொத்தை விற்றார். 1ம் வாதி பணம் ரூ.5இலட்சம் எடுத்து சென்றதாகவும் வேறொரு நபருடம் தவறான தொடர்பு வைத்திருப்பதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும்போது என் அண்ணன் தான் முன்னின்று எல்லா காரியங்களையும் செய்தார் என்றால் சரியல்ல. என்அண்ணனுக்கு அவர் மனைவி மது பழக்கத்தை ஏற்படுத்தினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்அண்ணன் மருத்துவமனையில் கடைசி காலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவர் மனைவி உடனிருந்து கவனித்து அவர் இறந்தபின்னர் காரிய காரியங்களை செய்தார் என்றும், அப்போது நாங்களும்

உடனிருந்தோம் என்றால் சரியல்ல. உடனிருந்த ஆண் உதவியாளர் என்ற முறையில் என் கணவருக்கு மருத்துவமனையில் இருந்து தகவல் சொன்னார்கள் என்றும் அதை வைத்துக்கொண்டு நாங்கள் என் அண்ணனை கவனித்து கொண்டதாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் 2012ம் ஆண்டில் ஏற்பட்டது. அந்த சொத்திற்கு 2018ம் ஆண்டு வரை எங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்களை என் அண்ணன் இறந்தபின்னர் விற்றோம் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வராத ஆவணம் என்றும், அதனால் தான் என் அண்ணன் உயிரோடு இருக்கும் வரை அதை வெளியில் காட்டாமல், விற்காமல் இருந்தோம் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாத ஆவணம் என்றும் அதன் மூலம் நாங்கள் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. 02.12.2019 தேதியில் என் அப்பா என்பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 18.09.2006ம் தேதி நானும், என் சகோதரிகளும் நல்லதம்பி என்பவரிடம் இருந்து சொத்துக்களை 3 பத்திரங்கள் மூலம் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த கிரையங்களுக்கு என் தகப்பனார் தான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்தகப்பனார் பணம் கொடுத்ததால் அவை பூர்விக சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரையங்களுக்கு என் கணவர் மற்றும் என் சகோதரிகளின் கணவர்களின் பூர்விக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள். நாங்கள் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். சாட்சி தானாக நாங்கள் பேசிக்கொள்ளலாம் என்று இருந்ததாக கூறுகிறார். எதிர்வழக்குரையில் நாங்கள் குறிப்பிடும் சேர்க்கப்படவேண்டிய நபர்கள் மற்றும் சொத்துக்கள் என்று கூறுவது வழக்கற்காக கூறுகிறோம் என்றால் சரியல்ல. என் அப்பா நீதிமன்றம் வந்து

சாட்சி சொன்னால் உண்மையை கூறிவிடுவார் என்பதற்காக அவரை வரவிடாமல் தடை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும் மற்றும் மனோகரனக்கு கிரையம் கொடுத்த ஆவணத்திலும் சொத்துக்கள் தனக்கு பூர்விகமாக பாத்தியபட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரிகளும் என் அப்பாவின் வயோதிகத்தை பயன்படுத்தி ஆவணங்கள் உருவாக்கியுள்ளோம் என்றும், அவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் கோரும் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**
இல்லை.

**5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.